
உ

# இதயத்தின் ஒளிச்சுடர்



## அமரர் திருமதி. நளினி ஜீவநாதன்

அவர்களின்

# ஓராண்டு நினைவு மலர்

28.05.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

தெய்வீகத்தாயாய்

கணவனுக்கேற்ற இல்லாளாய்

குடும்பத்தின் திருமகளாய்

பாசமிகு பாட்டியாய்

உறவாய் . . சகோதரியாய்

எல்லோருக்கும் இனியவளாய் வாழ்ந்து

இறைவனடி சேர்ந்த

**அமரர்**

**திருமதி. நளினி ஜீவநாதன் அவர்களின்**

பொற்பாத கமலங்களில்

இம்மலரை காணிக்கையாய்

சமர்ப்பிக்கின்றோம்

**-குடும்பத்தினர்-**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி



விநாயகனே வெவ்வினையை வேலறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாய்
தன்மையினால் கண்மின் பணிமின் கனிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலுண்டு வினை தீர்க்க மயிலுண்டு எனைக்காக்க
பாரினில் பயமேது பழனி மலை முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# திருமதி. நளினி ஜீவநாதன்

தவப் பேறு:
08-05-1955

சிவப்பேறு:
28-05-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடுகள்

பாண்டிருப்பின் புகழ்பூத்த இரு குடும்பங்களின் ஒன்றிணைவே ஜீவநாதன் நளினி தம்பதிகளின் மணவாழ்க்கை.

கந்தப்பர் குழந்தைவேல் மாசிலாமணி செல்லமுத்து தம்பதிகளின் தலைமகனாய் பிறந்த ஜீவநாதன் கந்தையா அழகுதுரை சின்னப்பு தங்கச்சிபிள்ளை தம்பதிகளின் புதல்வி நளினிதேவி அவர்களை காதல் திருமணம் செய்து கொண்டார்.

ஒரு காதல் திருமணம் குடும்ப உறவுகளின் எல்லா தரப்பினரையும் திருப்தி படுத்த முடியாத ஒன்று. ஆனால் தங்கள் நல்லறமாம் இல்லறத்தில் நன்மக்களைப் பெற்று அவர்களை சீரோடும் சிறப்போடும் வாழவைத்து குடும்ப உறவுகளின் நன்மதிப்பையும் பெற்று ஆசிர்வாதமான வாழ்வை வாழந்தவர்கள் ஜீவநாதன் நளினி தம்பதியினர்.

ஒரு மனைவி என்ற ஸ்தானத்தில் தனக்குரிய கடமைகளை பொறுப்பை செவ்வனே உணர்ந்து தன் கணவரோடு இணைந்து சோதனைகளை சாதனைகளாக்கி நின்றவர் அமரர் நளினி அவர்கள்.தனது ஐந்து மழலைச்செல்வங்களின் வாழ்வின் உயர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி சிறந்த ஒரு தாயாக பரிணமித்தவர் அவர்.மகன்களான சிறிஸ்கந்தராஜா (மதன்) ஜீவானந்தராஜா (ஆனந்தன்) மகள்களான சுரேந்தினி பிறேமினி அவர்களுடன் காலன் கையில் பறிகொடுத்த தனது ஆண்மகரான சுபராஜ் ஆகியோருடன் ஐந்து மக்களை ஈன்றவர்.

நான்கு பிள்ளைகளக்கும் ஏற்றபடி சிறப்புடன் திருமணம் நடத்தி முடித்து அவர்களின் மழலைச்செல்வங்களுக்கு சிறந்த ஒரு பாட்டியாக வாழ்ந்து மறைந்தவர் அமரர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளில் வாழ்ந்த தமது பிள்ளைகளை பார்த்து வர கணவருடன் அடிக்கடி சென்று வருவார்.அவர்களுக்கு அவர்களது பிள்ளைகளான தனது பேரக்குழந்தைகளுக்கு விருப்பமானவற்றை சிரமம் பாராமல் எடுத்து சென்று கொடுப்பார்.

ஊரில் உற்றார் உறவினர்கள் மட்டுமல்லாமல் எல்லோர் வீட்டு சுக துக்க நிகழ்வுகளிலும் முன்னின்று உதவிசெய்யும் மனப்பாங்கு உடையவர். மகிழ்வான குடும்ப நிகழ்வுகளான புதுமனை புகுதல் திருமணம் பூப்புனித நீராட்டு போன்றவற்றில் ஜீவநாதன் நளினி தம்பதிகளுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்படும். அதற்கு காரணம் எந்த வீட்டு நிகழ்வையும் தன்விட்டு நிகழ்வாகவே கருதி அது சிறப்பாக நடந்தேற தன்னால் இயன்றமட்டும் முயற்சி செய்யும் அமரர். நளினி வர்களின் குணவியல்பே.

எவருடனும் சுடுசோல் பேசாதவர். உறவுகளை ஊராரை அனுசரித்து அவர்களுடனான தனது நேசத்தை அன்பை வெளிப்படுத்தி வாழ்ந்த பெண்மணி.அன்னாரது இழப்பு அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல அக்கம் பக்கத்து குடும்பங்களுக்கும் பேரிழப்பான ஒன்றாகும் என்பது மிகையானது அல்ல.

அன்னாரின் நினைவும் அவர் தந்து விட்டு போன நல்வாழ்வும் அதன் சிறப்புக்களும் அவரது குடும்பத்தில் நிலைபெற்று மெனமேலும் சிறப்படைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**-குடும்பத்தினர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவவினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

### திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன் தன் விருப்ப அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்கு ஆக
வெளிவளர் தெய்வக் கூத்து கந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்து வம்பின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவி
லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர. . .  எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும். . . அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் . . . இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் . . . ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு . . . கழுதாடக்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகட . . . எனவோத

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென . . . . முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல . . . . பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்துடிப்பு ஒவ்வொன்றிலும் நீ

உன் காதலில் வீழ்ந்த போது
நான் முடிசார்ந்த மன்னன்.
உன்னைக் கரம் பிடித்தபோது
நானோ முடி துறந்த மன்னன்.
நமது காதல்
தெய்வீகமானது ம்டடுமல்ல
தெருவெல்லாம் பேசப்பட்டதும் கூட.
இருவரும் இணைந்த வாழ்வில் நாம்
எதிர் கொண்டவைதான் எத்தனை?
எந்த கணத்திலும் எமதிடையேயான
பரஸ்பர காதல் மட்டும் மாறவேயில்லை
உனக்கு நான் எனக்கு நீ என்ற
ஆசீர்வதமான வாழ்வின்
சகல செல்வங்களும் சௌபாக்கியங்களும்
பெற்றே வாழ்ந்தோம்.
தெய்வ வரம் பெற்ற பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்
சந்தோசம் திருப்தி நிம்மதி என
ஒன்றுபட்டே வாழ்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி பெறுவதற்கு இன்பமே இல்லை

மகிழ்ச்சியே இல்லை

என்ற வாழ்வில்

காலன் கண்தான் பட்டதோ

எனைத் தனியனாக்கி

இறைவனடி சேர்ந்தாய்.

எனக்கு எல்லாமாய் இருந்தவளே

என் துணையே என் காதலே

வார்த்தைகளில் வடிக்கவொண்ணா நல்வாழ்வை

எனக்கு வரமாய்த் தந்த தேவதையே

எனது இறுதிச்சுவாசம் நிற்கும் வரை

என் ஒவ்வொரு சுவாசத்திலும் நீ இருப்பாய்

என் இதயத்துடிப்பு நிற்கும் வரை

ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் நீ இருப்பாய்

இரு. என்னோடே இரு.


உன் காதல் கணவன்


**குழந்தைவேல் ஜீவநாதன்**

தனது மிகநெருங்கிய உறவொறன்றின் இழப்பில்தான் மனிதன் மரணத்தின் வலியையும் அது எத்தனை கொடுமையானது என்பதனையும் உணர்கிறான். இவ்வுலகில் எல்லோர்க்கும் மரணமுண்டு என்பது இறைவனால் எழுதப்பட்ட ஒன்றே. ஆனால் அது முன்பே தெரியவராத ஒன்று. அதனை உணர்ந்த மனிதனாக மனிதநேயத்துடன் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளமைத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகன் குடும்பம்



இரண்டாவது மகன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூன்றாவது மகள் குடும்பம்



நான்காவது மகள் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரத்துவம் அடைந்த இளைய மகன் சுபராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா...

எனக்கு கிடைத்த அம்மாவைப் போல்
வேறு யாருக்கும் கிடைக்காது.இந்த உலகில்
கடைசியாக உங்களுடன் இருந்த அந்த 16 நாட்களும்
ஒவ்வொரு நிமிடமும் என் நினைவில் வருகிறது அம்மா!

நீங்கள் பேசக்கூட முடியாமல் இருந்தபோதும் என்னை
"சாப்பிட்டியா? ரீ குடிச்சியா" என்று கேட்டதும்
உங்களால் சமைத்து தர முடியாமல் இருக்கிறதே
என்று கவலைப்பட்டதும் நினைவில் உள்ளது அம்மா!

உங்ளைப் பார்க்க வருபவர்களை உங்களால் முடியாமல்
இருந்தபோதும் சாப்பிடுங்க ரீ குடிங்க என்றும்
சொல்லிக் கொண்டே இருப்பீங்களே அம்மா.!

நாங்கள் குடும்பத்தோடு வரும்போதும் எங்களையும்
பிள்ளைகளையும் அவர்களுக்கு வேண்டியதையும்
கேட்டு சமைத்து தருவீங்களே அம்மா!

நல்ல பண்பும் பாசமும் அரவணைப்பும் உள்ள
உங்களை இழந்ததை என்னால் தாங்க முடியவில்லை அம்மா.
We all miss you very much amma!
நினைவுகளோடு வாழும் உங்கள்

**அன்புடன் மூத்த மகன் மதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கண்ணீரில்...

உங்கள் வீட்டில் முதன்முதலாய் வந்த என்னை ஒரு மகளாய் பார்த்த தருணம் என்னை ஞாபகங்களாய் நிகழவைத்துக்கொண்டெ இருக்கின்றது.என் பெயர்சொல்லி அழைக்கும் உங்கள் அழகிய இனிய குரல் மிண்:டும் மீண்டும் நினைவுகளாலும் கண்ணீராலும் கரைந்து வருகின்றது. எங்களுடன் நீங்கள் பணணித்த நாட்கள் நீங்கள் என்னுடன் சேர்ந்து சமைக்கும் போது ஒரு நண்பியைப் போல சிரித்து கழைதபேசி சமைக்கம் ஞாபகங்கள் அடிக்கடி வந்து போகும்.

மகன் மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகள் பற்றி ஊரில் உல்லோரிடமும் நல்லவிதமாக சொன்னதை அவர்கள் என்னிடம் சொல்லும்போது அது எனக்கு சந்தோசத்தை அள்ளிக்கொடுக்கும். இன்னுமே பாசம் அதிகமாகவும் உயர்ந்ததே தவிர குறையவே இல்லை.

நீங்கள் இடையிலேயே பிரிந்து விடுவீர்கள் என்று கனவிலும் நாங்கள் நினைக்கவில்லையே. தினமும் தினமும் உங்கள் நினைவுகளில்.... கண்ணீரில் கரையும் உங்கள் பாசமிகு உள்ளங்கள்.

**மகன் ஆனந்தன் மருமகள் கௌரி,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தின் நிரந்தரச் சுமை

அம்மா

ஆழமாக பதிந்து நிற்கிறது உனது பிரவுத்துயர்

எல்லோர்க்கும் நல்லவராய் வாழ்வதென்பது

இலகுவான ஒன்றல்ல அதற்கு தியாகங்களும்

கூடவே சோதனைகளையும் சந்திக்க வேண்டும்.

நீங்கள் சந்தித்தீர்கள்.

வாழ்ந்தே காட்டினீர்கள்

அழிக்க முடியாத நினவுத் தடங்கள் அவை.

நீக்க முடியாத நினைவுக் கோலங்கள் அவை.

ஆம். அன்பான அன்னையே ....

எந்தன் இதயத்தின் நிரந்தரச் சுமையாய்

இனிமையான சுகமொன்றாய் இருப்பீர்கள்

எனது இதயத்தின் காணிக்கைகள்

உங்கள் காலடியில்.

**அன்புடன் மகள் சுரேந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா . . .

அம்மா உங்களைப்போல் பெண்மணியை இந்த உலகத்தில் நான் யாரையும் பார்த்ததில்லை. அன்பும், பொருமையும் அனுசரனையும் கொண்ட சாந்தமான அழகிய முகம். வீட்டிற்கு வருபவரை அன்போடு உபசரிக்கும் கருணை கொண்ட உள்ளம். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து எனக்கு அடித்தோ ஏசியோ இருக்க மாட்டீர்கள். நாங்கள் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கூட ஒரு போதும் எங்களை எதிர்பார்க்கமாட்டீர்கள். எல்லா வேலைகளையும் தனியாளாக நின்று செய்து முடிப்பீர்கள். எனது மூன்று பிள்ளைகள் பிறக்கும் போது எனக்கு உதவியாக நின்று உணவு சமைத்து தந்து பிள்ளைகளையும் அன்பாக கவனித்தீர்கள். உங்களது இழப்பு எங்களுக்கு தாங்கமுடியாத பெரும் துயரமாக எங்களது உள்ளத்தில் எப்பொழுதும் இருக்கும். எனது கடைசி மகள் “அம்மம்மா சாமிட்ட போயிட்டாவா” என்று எப்பொழுதும் உங்களைக் கேட்பாள். அவள் உருவில் நான் உங்களைப் பார்க்கின்றேன் அம்மா.!



**இவ்வண்ணம்**
**கடைசிவரை உங்கள் நினைவுடன் வாழும்**
**கடைசி மகள் பிரேமினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் நினைவில்...

## அப்பம்மா

அப்பம்மா! என்நாவில் இப்போழுதும் சுவையாக உள்ளது நீங்கள் வெட்டித் தந்த மாம்பழம்.

**பேத்தி சி.பிரணவிகா**

## அப்பம்மா

அப்பம்மா எனக்கு பிடித்ததை வாங்கி கொடுக்கச் சொல்லி அப்பப்பாவிடம் சொல்வதும். எங்களுக்கு விரும்பியதை சமைத்து தருவதும் அதை அன்போடு ஊட்டி விடுவதும் நினைவில் வருகிறது அப்பம்மா நீங்கள் இருக்கும் இடத்தில் சந்தோசமாக இருங்க அப்பம்மா..

**பேரன் சி.சஷ்வின்**

## அப்பம்மா

அப்பம்மா எனக்கு என்றும் நினைவில் வருவது "நான் ஒரு நாள் உங்களிடம் கேட்டேன் "நாம் இறந்தால் என்ன நடக்கும்? "என்று அதற்கு நீங்கள" அங்கே (மேலே) ஒரு பெரிய விடு இருக்கு எல்வோரும் அங்கே" ஒன்றாக இருப்போம்" என்று கூறினீர்கள்.

"சாப்பாடு தருவார்களா என்று நான் திருப்பி கேட்டதும் அங்கே எல்லாம் கிடைக்கும் என்று சொன்னிங்க அப்பம்மா.

உங்களுக்கு அங்க எல்லாம் கிடைக்க நான் கடவுளை கும்பிடுகிறேன் அப்பம்மா.

**பேத்தி சி.ஷாத்விகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GRAND DAUGHTER'S LOVE



Dear Ammama,

You were the kindest, most loving soul.

You spent your entire life caring for those around you;

And never refused any request of mine.

You showered me with endless gifts.

But my fondest memory dates back a couple years –

When I curiously inquired about the prawn curry rotis in your hand over skype.

As promised, you made them for me the next time we met,

Full of love and without a complaint.



I wish I had thanked you more.

I wish I had hugged you a little tighter.

My biggest regret is the time spent apart,

Or perhaps, time not properly spent.

Maybe in another lifetime,

When I am once again your granddaughter,

We'll have more time to talk, laugh and love.



Always and forever,

Akkshi

## GRAND SON'S LOVE

Ammama was a very gentle and kind person. I remember the late-night video call I had with her when I would play around with the camera and wonder what the rest of her home looked like. I also have all these great memories of when we were traveling India and Malaysia, sight-seeing various tourist attractions and over-indulging in delicious cuisines. During these trips she would always buy me the toys I wanted and pampered me to no end just to put a smile on my face. I miss you Ammama.

- Sai Thrishaan Niruthapalan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மம்மா . .

அம்மம்மா நீங்கள் இனிமையானவங்க, நீங்கள் லண்டன் வந்து நிற்கும் போது நான் உங்களுக்கு படிப்பிப்பேன். உண்மையா அதை நான் Miss பண்ணுகின்றேன். நீங்கள் நல்லா சுவையான சாப்பாடு சமைத்து தருவீர்கள் அத்தோடு நிறைய நேரம் என்னோடு Fun ஆக சிரித்து விளையாடுவீர்கள். நாங்க எல்லாத்தையும் மிகவும் Miss பண்ணிட்டோம் அம்மம்மா.



**இப்படிக்கு உங்கள் பேத்தி**
**பிறிஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் வாழும் வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது

நாம் வாழும் வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது
வாழ்நது முடிந்தபின் நம்மை யாரும் மறக்க கூடாது
அதுதான் வாழ்க்கையின் உண்மையான வெற்றி . . .
அப்படி வாந்து மறைந்து விட்டார் எங்கள் அண்ணி . . . அண்ணி
உங்கள் உபசரிப்பையும், நீங்கள் செய்து தந்த சிற்றுண்டிகளையும்
என்றும் மறக்க முடியாமல் இருக்கின்றது . . .
உங்கள் பிரிவால் வாடும் . . .



**அன்புடன் மகேந்திரன் குடும்பம்**



## அன்பு மாமிக்கு . . .

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி மிகவும் மனவேதனையளிக்கின்றது. அவருடன் நாங்கள் பழகிய கடந்த கால நிகழ்வுகளும் இன்முகமும், சிரிப்பும், உபசரிப்பும் எங்கள் கண்கள் கலங்குவதை என்றும் கட்டுப்படுத்த முடியாது. எங்கள் மாமியின் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அன்புடன் மருமகள் துஷாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா புலம்பல்

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் என் நினைவிலே உன் முகம் மலர்ந்திருக்கும் தங்கையே.
நளினா நளினாவென்று இனி அழைப்பதெப்போ!
அன்பு மொழி வார்த்தை கேட்பதெப்போ!

நளினா நளினாவென்று ஆயிரம் தரம் அழைத்தாலும்
என் இதயத்தில் நீ தங்கை போன்றல்ல நண்பி போன்று தான்,
உன் நாமம் என் நாவில் ஒளிக்கும் தங்கையே,
நாம் பாண்டிருப்பில் வாழ்ந்த பசுமை நினைவுகள்
இன்றும் நெஞ்சில் இனிக்கின்றனவே.

நான் வெளிநாட்டில் இருக்கும் போது
என் பிள்ளைகளை என் நேரம் கண்டாலும்
சாப்பிட்டாயா? சாப்பிட்டு விட்டுப் போ என விடாப் பிடியாய் கூறுவாயே.

உன்னோடு உடன் பிறந்த என் வாழ்க்கையை எப்படி நான் மறப்பேன்
எழுத்தில் முடிக்கலாமா நம் உறவு!

மற்றவர்களை சிறிதும் புண்படுத்தாத பக்குவமும்
அயலவர்களுக்கு உதவும் குணமும் உன்னிடம்
கற்றுக் கொள்ள வேண்டிய உயர்ந்த பண்புகள்

நளினா என்று நான் தொலைபேசியில் அழைத்திட "அக்கா" என்று கம்பீரமாய் அழைப்பாய்
மரணப்படுக்கையில் கூட, அந்த ஒலி நெஞ்சில் நிறைந்து எப்போதும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

ஆண்டுகள் பல சென்றாலும் மறவாது உன் நினைவு
காலன் உன் உயிரை கவர்ந்து விட்டான்.
கதறி அழுதாலும் தர மாட்டான் விதி செய்த சதி என்று எண்ணி சென்று வா நளினா. ஆழ்ந்த அனுதாபங்கள்

**அன்புடன் அக்கா பத்மா குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளியாய்.....

அன்புள்ளம் கொண்ட பெரியம்மாவே.
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகளை சுமந்து
கதிகலங்கி நிற்கின்றோம் தாயே

நீங்கள் இவ்வுலகில் கபடமில்லாத
வாழ்வு வாழ்ந்தீர்கள் அதை நாங்கள்
நீங்கா சுவடுகளாக்கி நினைத்து
மனமுருகுகின்றோம். பெரியம்மாவே.

நாங்கள் கதிகலங்கி நின்ற வேளை
நீங்கள் பெற்ற பிள்ளைகள் போல்
தாயன்பை காட்டி வாழவைத்திர்
இல்லறத்தை நல்லறமாக்க வழியும் காட்டினீர்

வாழ்ந்தபோது மண்ணில் மாணிக்கமாய்
வாழ்ந்த நீங்கள் மரணித்தும்
எங்கள் நெஞ்சில் தீபமாய் ஒளிவிட்டு
வழிகாட்ட மண்டியிட்டு வேண்டுகின்றோம்.
உங்கள் அன்புக்காக ஏங்கும்

**அன்புடன் யுவன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிதே
# வாழ்ந்த இனியவளே

இல்லறத்தை நல்லறமாக்கி இனிதே

வாழ்ந்த இனியவளே



இன்பத்திலும் துன்பத்திலும்

சிரித்து வாழ்ந்த சீமாட்டியே

அடுத்த வீட்டில் இருந்து

சிறப்பாய் வாழ்ந்து வந்த அழகு தேவதையே

எங்கள் பெறா மகளே

உடன் பிறவா சகோதரியே

உங்களது பிரிவால் துயர்புரியும்

**உடன் பிறவா சகோதரி யோகம்**

---

அன்பெனும் விதை விதைத்து

ஆசையெனும் நீர் ஊற்றி

பண்பென்ற பந்தல் அமைத்து

உங்கள் இதயமெனும் மாளிகையில்

என்றும் நீங்காத இடம் வைத்திருந்த



மனிதருள் மாணிக்கமே

எங்களை விட்டு மிக விரைவில்

பிரிந்து சென்ற உத்தமியே

அன்பு மச்சாளே உங்கள் பிரிவை

மறக்கதான் முடியுமா?

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்

**அன்புடன் திரு. திருமதி. கிருஸ்ணவேனி ரவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்ற சகோதரிக்கு . . . !

வேரோடி விழுதூன்றிய ஒரு குடும்ப விருட்சமாய் நின்றவர் நீங்கள். சகோதரிகள் இல்லாத எங்களின் உற்ற சகோதரி நீங்களே பெண்மகளில்லாத எங்கள் அன்னையிடம் பேரன்பு கொண்ட பெறா மகள் நீங்களே.

பராயமறியாப் பருவம் முதல் பராயமறியும் வரை எங்களில் பாசமழை பொழிந்த மழைமேகம் நீங்களே.

ஆம். எம் உறவுகளின் எல்லா சுக துக்க நிகழ்வுகளிலும் தலையாரி நீங்களே.

உங்கள் சிரித்த முகத்தின் செழுமை நிகழ்வை சிறப்பாக்கும் . . ஆனால் . . . ஆனால் . . . இன்று? விருட்சமான நிழலில் வளர்ந்து செழித்து பூத்துக் குலுங்குகின்ற பசுந்தளிர்க் குடும்ப உறவுகளை பெரும் புயல் தாக்கியதே?

மிக நெருங்கிய உறவின் மரணம் மனதால் தாங்க முடியாதது மட்டுமல்ல... நம்பவவே முடியாத ஒன்றும் கூட. சகோதரியே நீங்களா எம்மை விட்டு போனீர்கள்? நீங்கள் இல்லாத இந்த உலகிலா நாங்கள்? உங்கள் இறுதிக்கணங்கள் வரை உம்மோடிருந்தோம். காலனவன் கையில் நீங்கள் சிக்காமலிருக்க பலவழிகளில் பல முனைகளில் நின்று போராடினோம். தலைநகர் கொழும்புவரை வந்து தலை கொடுத்து நின்றோம் . . சகோதரியே தோற்றுவிட்டோமம்மா நாங்கள். எமனிடம் இருப்பது பாசக்கயிறு என்பார்கள். இப்போதுதான் புரிகிறது அது பாசக்கயிறே அல்ல பாசங்களை அறுத்தெறிகின்ற கயிறு என்பது . . எது எப்படியோ இன்று நீங்கள் ஈசனவன் இறையடி நிழலில் . . . எங்கள் அழுகைக் கண்ணீர்த் துளிகள் பெருவெள்ளமாய் உங்கள் பாதங்களை நனைக்கட்டும் என்றும் உங்கள் நினைவுகளோடு நாங்கள்

**அன்புடன் ராஜேந்திரன், சேகர், உதயன், ரகு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். நளினி அவர்களின் சகோதரர்கள் மற்றும் உறவுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ஜீவநாதனின் அம்மா, மகன், மருமகன்,
மகள், ஜீவா (தங்கை), சின்னம்மா



திரு. ஜீவநாதனின் சகோதரர்
மகேந்திரநாதன் மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நன்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடிந்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளித்தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனை எண்ணியல்லா சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மை உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வைகையாற்றுப் படலமிதை வழிவழியாகக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறியைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தாள் வாழ்ந்திடுவோம் ஏத்தபுகழ் தேவியளே
காசினியிலே வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்தபுகழ் தேவியளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெலாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நல்முடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்தி மனத்துடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருள்வாய் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால் உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

- கௌரி காப்பு முற்றும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டாமரக்கன் றிநின்பதந்
தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்வர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ!
உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்லியுங் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவ முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீங்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுவெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!


சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணடை
கற்கும் பாதம்புயத் தாயே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கன் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருடசம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நினைக்கின்றோம்

ஆறாப் பெருந்துயரில் எம்மை ஆளாக்கி
எமைப்பிரிந்து இறையடி எய்திய
அமரர் நளினி ஜீவநாதன்
அவர்களின் இறுதிக்கிரியைகளில்
பங்கு பற்றி எமக்கு ஆறுதல் பகன்றவர்க்கும்
அஞ்சலிகள் செலுத்தியவர்கட்கும்.
அன்றைய கொரோனா இடரினுள்ளும்
சிரமம் பாராது எமதில்லம் வந்து
எமது துயரில் பங்கு கொண்டவர்க்கும்
அன்னாரின் இறுதிக் கிரியைகள்
இனிதே நிறைவேற பங்காற்றிய
அனைத்து அன்புள்ளங்களுக்கும் மற்றும் இம்
மலரை நேர்த்தியாக அழகுற செய்து தந்த
விக்டரி அச்சகத்தினருக்கும் என்றும் மறவாத
எங்களது பெருநன்றிகளை
தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஜீவநாதன் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் நீ

தாயும் நீ
தந்தையின் தாரமும் நீ
அணையாத ஒளிச்சுடராய்
எங்கள் இதயத்தில் நீ
அம்மா உன் மடிதனில்தான்
எங்கள் மகிழ்ச்சியே கழிந்தது
நீயில்லாத தனிமையில் அப்பா
விருட்சமாய் அமைந்த நம் குடும்பத்தின்
ஆணிவேரே நீதானம்மா.
அப்பா என்ற ஆழுமையின்
அருகிருந்து எமை ஆண்டவள் நீ
என்றும் அது மாறாதம்மா
இனிவரும் காலங்களில்
எமது குடும்ப நிகழ்வுகள்
அனைத்திலும் நீ இருப்பாய் அம்மா
உனக்கென்ற இடமும் நினைவும்
எப்போதும் என்றுமே உள்ளதம்மா
இறையடியில் இளைப்பாறச்சென்றாய்
உனது
ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனையில்
உன் அன்புக்கணவரும்
பிள்ளைகளும் பேரர்களும்

விக்டரி அச்சகம், கல்முனை.0771597347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org